# கள்ளப் போதகர்கள்

**மனன வசனம்**

**தாங்களே கேட்டுக்கு அடிமைகளாயிருந்தும், அவர்களுக்குச் சுயாதீனத்தை வாக்குத்தத்தம் பண்ணுகிறார்கள்; எதினால் ஒருவன் ஜெயிக்கப்பட்டிருக் கிறானோ அதற்கு அவன் அடிமைப்பட்டிருக் கிறானே. 2பேதுரு 2:19.**

**ஆராய்ச்சிக்கு**

**2பேதுரு 2:1-22; யோவான் 8:34-36; மத்தேயு 12:43-45; யூதா 4-19; ஆதியாகமம் 18:16-33.**

ஜூன் 3 பிற்பகலில், இந்த வேதப்பகுதிகளை வாசித்து, மனனவசனத்தை மனனம்செய்க.

தமது முதல் நிருபத்தில் ஒரு போதகருக்குரிய அக்கறையோடு, சபைக்கு வரவிருந்த உபத்திரவங் களைக்குறித்து பேதுரு எச்சரித்தார். என்னவிதமான உபத்திரவங்கள் என்பது நமக்குத் தெரியவில்லை. ஆனால், வளர்ந்துகொண்டிருந்த கிறிஸ்தவம் எனும் இயக்கத்தை அழிப்பதற்கு அஞ்ஞான ரோமப்பேரரசு முயற்சித்தபோது, கொடிய உபத்திரவங்கள் வந்திருக் கும் என்பதுமட்டும் புரிகிறது.

சாத்தான் இரண்டுவிதமான தாக்குதல்களைத் தொடுத்தான். சபைக்கு வெளியேயிருந்து அவன் கொடுத்த மிருகத்தனமான உபத்திரவம் பலத்த ஆயுதம்தான். அதுமட்டுமல்லாமல், உபத்திரவத்தைவிட ஆபத்தான இன்னொரு தாக்குதலும் சபைக்கு வந்தது. அது சபைக்கு உள்ளேயிருந்து வந்தது. யூததேசத்தில் கள்ளத்தீர்க்கதரிசிகள் இருந்ததுபோல, ஆதித்திருச் சபையில் கள்ளப்போதகர்கள் இருந்தார்கள். அவர்கள் கேட்டுக்கேதுவான வேதப்புரட்டுகளைத் தந்திரமாய் நுழையப்பண்ணினார்கள். 2பேதுரு 2:1. “அவர்களு டைய கெட்ட நடக்கைகளை அநேகர் பின்பற்றுவார்கள்” என்றும் பேதுரு எச்சரிக்கிறார். 2பேதுரு 2:2. இது மிக வும் மோசமாக இருந்தது.

எந்தத் தவறான உபதேசங்களைக்குறித்து பேதுரு எச்சரித்தார்? அவற்றைப் பேதுரு எவ்வாறு சந்தித்தார்? அதேபோல, இன்று சபைக்குள்ளிருந்து தவறான உபதேசங்கள் கிளம்பும்போது, நாம் அவற்றைச் சந்திக்க வேண்டியவிதம்பற்றி இந்நிருபம் நமக்கு என்ன கற்றுத் தருகிறது?

2017, ஜூன் 10 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்

## கள்ளத்தீர்க்கதரிசிகளும் கள்ளப்போதகர்களும்

ஆதித்திருச்சபையில் விசுவாசிகள் எல்லோரும் சமாதானமாகவும் ஐக்கியமாகவும் இருந்தார்கள் என்று சொல்லிக்கொள்ள நாம் ஆசைப்படலாம். ஆனால், உண்மைநிலை அப்படியில்லை. இயேசுவின் காலத்தில்கூட சபையில் பிரச்சனைகள் இருந்தன. யூதாஸை நினைத்துகொள்ளுங்கள். பல பிரச்சனைகளுக்குக் காரணம் சபைக்குள் எழும்பிய தவறான உபதேசங்களே. வெளியேயிருந்து வந்த உபத்திரவம்மாத்திரம் அல்ல, உள்ளேயிருந்து எழும்பிய பிரச்சனைகளும் இருந்தன. புதிய ஏற்பாட்டு நிருபங்கள் இதை வெளிப்படுத்துகின்றன. சபைக்கு உள்ளேயிருந்து எழும்பிய சில சவால்களைப்பற்றி 2பேதுரு பேசுகிறது. “கள்ளத் தீர்க்கதரிசிகளும் ஜனங்களுக்குள்ளே இருந்தார்கள். அப்படியே உங்களுக்குள்ளும் கள்ளப்போதகர்கள் இருப்பார்கள்; அவர்கள் கேட்டுக்கேதுவான வேதப்புரட்டுகளைத் தந்திரமாய் நுழையப்பண்ணி, தங்களைக் கிரயத்துக்குக்கொண்ட ஆண்டவரை மறுதலித்து, தங்களுக்குத் தீவிரமான அழிவை வருவித்துக்கொள்ளுவார்கள். அவர்களுடைய கெட்ட நடக்கைகளை அநேகர் பின்பற்றுவார்கள்; அவர்கள் நிமித்தம் சத்தியமார்க்கம் தூஷிக்கப்படும். பொருளாசையுடையவர்களாய், தந்திரமான வார்த்தைகளால் உங்களைத் தங்களுக்கு ஆதாயமாக வசப்படுத்திக் கொள்ளுவார்கள்; பூர்வகாலமுதல் அவர்களுக்கு விதிக்கப்பட்ட ஆக்கினை அயர்ந்திராது, அவர்களுடைய அழிவு உறங்காது.” 2பேதுரு 2:1-3. விசுவாசிகளுக்குமத்தியில் சமாதானமும் ஐக்கியமும் இருந்ததாகத் தெரியவில்லை.

***2பேதுரு 2:1-3, 10-22 இல் பேதுரு எதைப்பற்றி எச்சரிக்கிறார்? சபைகளில் என்ன தவறான உபதேசங்கள் இருந்தன?***

இந்த நிருபத்தை எழுதும்படி பேதுருவை எதற்காக கர்த்தர் தூண்டினார் என்பதை 2பேதுரு 2:1 காட்டுகிறது. கடந்தகாலத்தில் கள்ளத்தீர்க்கதரிசிகள் இருந்தது போல, இனிமேல் கள்ளப்போதகர்கள் இருப்பார்கள் என்று பேதுரு எச்சரிக்கிறார். கேட்டுக்கேதுவான வேதப்புரட்டுகள்முதல், கேட்டுக்கு அடிமைகளாகுதல்வரை பல தவறுகளை பேதுரு பட்டியலிடுகிறார். 2பேதுரு 2:1-19. இவை மிக ஆபத்தான உபதேசங்கள் எனத் தெரிகிறது. அதனால்தான் அவற்றுக்கு எதிராகக் கடுமையான வார்த்தைகளைப் பயன்படுத்தியிருக்கிறார். உபதேசம் முக்கியமில்லை என்று பேதுரு நினைக்கவில்லை.

தவறான உபதேசங்கள்குறித்து பேதுரு எவ்வளவு கடுமையாக எச்சரிக்கிறார்? சத்தியம் எவ்வளவு முக்கியம் என்பதுபற்றி என்ன புரிகிறது? சபைக்குள் தவறான உபதேசம் நுழையாமல், நம்மை நாம் எப்படிப் பாதுகாத்து கொள்ளலாம்?

*வஞ்சகமாய் நடக்கிறவர்களிடத்திலிருந்து அரிதாய்த் தப்பினவர்களிடத்தில் இவர்கள் அகந்தையான வீண்வார்த்தைகளைப் பேசி, மாம்ச இச்சைகளினாலும் காமவிகாரங்களினாலும் அவர்களைத் தந்திரமாய்ப் பிடிக்கிறார்கள். 2பேதுரு 2:18.*

***இந்த வசனத்தில் பேதுரு என்ன எச்சரிக்கிறார்? அவருடைய கவலையைப் புரிந்துகொள்ள 2பேதுரு 2:19 எவ்வாறு உதவுகிறது? இவ்வசனத்தில் சுயாதீனம் என்பதின் அர்த்தம் என்ன?***

கள்ளப்போதகர்களால் வரும் ஆபத்தைக்குறித்து பேதுரு கடுமையான வார்த்தைகளால் எச்சரிக்கிறார். 2பேதுரு 2:18-21. சுயாதீனமும் விடுதலையும் கிடைக்குமென்று அவர்கள் வாக்குபண்ணினாலும் விசுவாசிகளை அடிமைத்தனத்திற்குள் நடத்திக்கொண்டிருந்தார்கள்.

சுவிசேஷத்தைத் தலைகீழாகப் புரட்டிவிட்டார்கள். கிறிஸ்துவில் சுயாதீனம் என்றால், பாவத்திலிருந்து விடுதலை கிடைப்பதாகும். ரோமர் 6:4-6. பாவத்திற்கு அடிமையாக இருந்துகொண்டே கிறிஸ்துவில் சுயாதீனமாக இருக்கிறோம் என்று உபதேசிப்பதுதான் இந்தக் கள்ளஉபதேசம். ஒரு மனிதன் பாவத்திற்கு அடிமையாக இருத்தலோடு தொடர்புடையதுதான் இந்தக் கள்ள உபதேசம்.

***பேதுரு சொல்லுவதைப் புரிந்துகொள்ள, யோவான் 8:34-36 இல் உள்ள கிறிஸ்துவின் வார்த்தைகள் எவ்வாறு உதவுகின்றன?***

இயேசுகிறிஸ்துவைச் சமீபத்தில் ஏற்றுக்கொண்ட புது விசுவாசிகளைப் பழைய பாவவாழ்க்கைக்கு வழிநடத்திச்செல்ல இந்தக் கள்ளர்கள் முயன்றார்கள். தூய்மை, பரிசுத்தம்பற்றிப் பேசாத மலிவான கிருபை இது. விசுவாசிகள் எந்தக் கேட்டிலிருந்து தப்பினார்களோ, அதே கேட்டிற்குத் திரும்பிச் சென்றார்கள். இந்தக் கள்ள உபதேசத்தைப் பின்பற்றினால் வரும் ஆபத்தைக்குறித்து பேதுரு எச்சரித்ததில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை.

கிறிஸ்துவில் சுயாதீனம் என்றால் என்ன அர்த்தம்? கிறிஸ்து உங்களை எதிலிருந்து விடுதலை செய்திருக்கிறார்?

செவ்வாய்
ஜூன் 6

## நாய் தான் கக்கினதைத் தின்னும்

***கிறிஸ்தவத்திற்கு மனந்திரும்பிய ஒருவர் மீண்டும் தன் பழைய வாழ்க்கைக்குத் திரும்புவதிலுள்ள ஆபத்துகள் யாவை? 2பேதுரு 2:17-22; மத்தேயு 12:43-45.***

பழைய பாவ வாழ்க்கைக்கு, கள்ளத்தீர்க்கதரிசிகளால் இழுக்கப்பட்ட விசுவாசிகளின் நிலைமைகுறித்து பேதுரு கவலைப்பட்டார். தம்மைப் பின்பற்றுகிறவர்களுக்கு, சுயாதீனம்தருவதாக இயேசு வாக்குபண்ணினார். இந்தக் கள்ளத்தீர்க்கதரிசிகளும் சுயாதீனம்தருவதாக வாக்குபண்ணினார்கள்; ஆனால், இது இயேசு சொன்ன சுயாதீனம் இல்லை.

அவர்கள் நீதியின் மார்க்கத்தை அறிந்தபின்பு, தங்கள் பழைய வாழ்க்கைக்குத் திரும்புவதைப்பார்க்கிலும் அதை அறியாதிருந்தார்களானால் அவர்களுக்கு நலமாயிருக்கும் என்று பேதுரு கடுமையாகப் பேசுவதைப் பாருங்கள்.

அதற்காக, அவர்களுக்கு இனி எந்த நம்பிக்கையும் இல்லை என்று பேதுரு சொல்லவில்லை. வழிவிலகிச் சென்றவர்கள் திருந்திவந்த சம்பவங்கள் நமக்குத் தெரியுமே. அப்படித் திரும்பிவரும்போது, கர்த்தர் மிகவும் மகிழ்ச்சி அடைகிறார் என்பதும் நமக்குத் தெரியும். வழிவிலகுதல் ஆபத்தானது, வேதனையானது என்பது முக்கியம். நாய் தான் கக்கினதைத் தின்னவும், கழுவப்பட்ட பன்றி சேற்றிலே புரளவும் திரும்பினது என்பது கடினமான வார்த்தைகள்தாம். ஆனால், பேதுரு அந்த உருவகத்தைத்தான் பயன்படுத்துகிறார்.

மத்தேயு 12:45; லூக்கா 11:26 இல் இயேசு சொன்னதின் எதிரொலிதான் 2பேதுரு 2:20. அசுத்த ஆவியின் பிடியிலிருந்து விடுதலைபெற்ற ஒரு மனிதனைப் பற்றிய உவமையை இயேசு சொன்னார். ‘‘நான் விட்டுவந்த வீட்டுக்குத் திரும்பிப் போவேன்’’ என்று சொல்லிக்கொண்டு, அந்த அசுத்த ஆவி திரும்பிவந்ததாம். மத் 12:44. அங்கே வந்து, அந்த வீடு வெறுமையாகவும், பெருக்கி, ஜோடிக்கப்பட்டதாகவும் இருக்கக் கண்டதாம். அப்போது அந்த ஆவி திரும்பிப்போய், தன்னிலும் பொல்லாத வேறு ஏழு ஆவிகளைத் தன்னோடே கூட்டிக்கொண்டுவந்து, அவனுக்குள் புகுந்து அங்கே குடியிருக்குமாம். அப்பொழுது, ‘‘அந்த மனுஷனுடைய முன்னிலைமையிலும் அவன் பின்னிலைமை அதிக கேடுள்ளதாயிருக்கும்’’ என்றார் இயேசு. மத்தேயு 12:45. உவமையில் இயேசு சொன்னதும், நிருபத்தில் பேதுரு விவரிப்பதுமான ஆபத்து நிஜமானது. ஒரு புது விசுவாசி, உலகச் செயல்பாடுகளை நிறுத்திவிட்டு, ஆவிக்குரிய செயல்பாடுகளைச் செய்யவேண்டும்; அதாவது, நம் விசுவாசத்தை மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்ள வேண்டும்: திருச்சபை செயல்பாடுகளில் பங்குபெற வேண்டும். இவை இல்லாவிட்டால், நாம் பழைய வாழ்க்கைக்குத் திரும்புவது எளிதாக இருக்கும்.

புது விசுவாசிகளைச் சீடராக்கி, பேணிவளரச் செய்வதற்கு, சபைக் குடும்பமாக என்ன வழிகளைக் கைக்கொள்ளலாம்?

2பேதுரு 2:1-22; 3:1-7 இல் உள்ளவை யூதா 4-19 இலும் சொல்லப்பட்டுள்ளன. அப்படியானால், அது முக்கியமான செய்தியாக இருக்கும். இவற்றில் பேதுருவும் யூதாவும் முக்கியமான ஓர் உண்மையை விரிவாக வலியுறுத்துகிறார்கள். துன்மார்க்கரின் முடிவு தேவனுடைய கட்டுப்பாட்டில் இருக்கிறது என்பதே அந்தச் சத்தியம். அநீதியான மனிதர்களாக இருந்தாலும் சரி, விழுந்துபோன தூதர்களானாலும் சரி, அவர்களுடைய தீமையை தேவன் கவனிக்கிறார்; அவர்களுக்கு நியாயத்தீர்ப்பின் நாளில் தேவன் நிச்சயம் தண்டனைகொடுப்பார். 2பேதுரு 2:9,17; யூதா 6.

***பாவத்தை தேவன் கண்டுகொள்ளாமல் விட்டுவிடமாட்டார் என்பதற்கு, முன்பு நிகழ்ந்த எந்தத் தண்டனைகளை யூதாவும் பேதுருவும் சுட்டிக்காட்டுகிறார்கள்? 2பேதுரு 2:1-22; 3:1-7; யூதா 4-19.***

முன்பு நிகழ்ந்த மூன்று தண்டனைகளை யூதாவும் பேதுருவும் பதிவுசெய்திருக்கிறார்கள். 2பேதுரு 2:4-6; 3:7; யூதா 6,7.

1. **ஜலப்பிரளயத்தில் உலகம் அழிக்கப்படல்**
2. **சோதோம் கொமோரா எரிக்கப்படல்**
3. **தீய தூதர்கள் அழிவுக்காகக் கட்டிவைக்கப்படல்.**

மூன்றிலுமே அவர்களுடைய அழிவை மாற்ற வழியில்லை. தேவன் இரக்கமும் கிருபையுமுள்ளவர்; ஆனால், நியாயத்தையும் காக்கிறவர். அதனால்தான், இறுதியில் பாவிகளை அழிக்கிறார்.

இப்படிப்பட்ட தண்டனைகளைப் பெற, அவர்கள் செய்த பாவம் என்ன? கேட்டுக்கேதுவான வேதப்புரட்டுகள்; 2பேதுரு 2:1. கர்த்தத்துவத்தை அசட்டை பண்ணுதல்; 2பேதுரு 2: 10. கேட்டுக்கு அடிமைகளாக ஜெயிக்கப்பட்டிருத்தல்; 2பேதுரு 2:19. தேவனுடைய கிருபையைக் காமவிகாரத்துக்கேதுவாகப் புரட்டி, ஒன்றான ஆண்டவராகிய தேவனையும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவையும் மறுதலித்தல்; யூதா 4. தங்கள் மாம்சத்தை அசுசிப்படுத்திக்கொள்ளுதல்; யூதா 8. அகந்தையான வீண்வார்த்தைகளைப் பேசுதல்; 2பேதுரு 2:18. மகத்துவங்களைத் தூஷித்தல்; யூதா 10.

இவை எல்லாம் நம்மைக் கோபப்படுத்துகிற வன்முறைச் செயல்களோ, அட்டூழியங்களோ இல்லை. இவை நாசூக்கான பாவங்கள்; நம் சபைகளில் உள்ள பாவங்கள்; நாம் கண்டுகொள்ளாத பாவங்கள்; நாம் கண்சாடையாக விட்டுவிடுகின்ற பாவங்கள். சபையோரும் மனந்திரும்பி, சீர்திருந்த வேண்டியுள்ளது என்பதை இந்த உண்மைகள் வலியுறுத்துகின்றன.

2பேதுரு 2:12உம் யூதா 10உம் சொல்கிறபடி, புத்தியற்ற மிருகஜீவன்களைப்போலவும், சுபாவப்படி புத்தியில்லாத மிருகங்களைப்போலவும் அழிவுக்குக் காத்திருக்கிறவர்கள் யார்? ஆதியில் தேவன் மனிதரைப் படைத்தபோது, அவர்களுக்காக அவர் வைத்திருந்த திட்டத்தோடு இது ஒத்துப்போகிறதா? உங்கள் வாழ்க்கையில் இந்தத் தவறு நடக்காதபடி எவ்வாறு தடுக்கலாம்?

## பழைய ஏற்பாட்டிலிருந்து மேலும் சில பாடங்கள்

***துன்மார்க்கம் என்ன செய்யும் என்பதுபற்றி, 2பேதுரு 2:6-16 இல் பேதுரு சொல்கிற வேறு உதாரணங்கள் யாவை?***

---

சோதோமைப்பற்றி முதலாவதாக ஆதியாகமம் 13:12,13 இல் பார்க்கிறோம். வேலைக்காரர் தகராறினால் ஆபிரகாமும் லோத்தும் பிரிந்தார்கள். லோத்து தனக்கு யோர்தான் பள்ளத்தாக்கைத் தெரிந்துகொண்டார்; அங்கே சோதோமுக்கு நேரே கூடாரம் போட்டார். ஆதியாகமம் 13:12. சோதோமின் ஜனங்கள் பொல்லாதவர்களும் கர்த்தருக்குமுன்பாக மகா பாவிகளுமாய் இருந்தார்கள். ஆதியாகமம் 13:13. பின்னர் சோதோமை தேவன் அழிக்கப்போவதாகச் சொன்னபோது, தேவனிடம் பேசி, ''பத்து நீதிமான்கள் அங்கே காணப்பட்டால், அதை அழிப்பதில்லை'' என்று தேவனிடம் உறுதிவாங்கினார். ஆதியாகமம் 18:16-33. ஆனால், பத்து நீதிமான்கள்கூட அங்கே இல்லை. லோத்துவைப் பார்க்கச்சென்ற தூதர்கள் விஷயத்தில் இது உறுதியானது. நகரம் அழிக்கப்பட்டது. லோத்துவும் அவருடைய இரு குமாரத்திகள்மட்டுமே தப்பினார்கள். ஆதியாகமம் 19:12-25.

இந்தச் சம்பவத்திலிருந்து பேதுரு இரண்டு படிப்பினைகளைக் கற்பிக்கிறார்.

1) **துன்மார்க்கருக்குத் தண்டனை உண்டு. 2பேதுரு 2:6.**
2) **தேவபக்தியுள்ளவர்களைச் சோதனையினின்று இரட்சிக்க, கர்த்தரால் முடியும். 2பேதுரு 2:7-9.**

சோதோம் கொமோராவில் அழிக்கப்பட்டவர்களின் குணத்தையும் சொல்கிறார். அசுத்த மாம்ச இச்சையோடே நடப்பவர்கள்; அதிகாரத்தை அசட்டைபண்ணுகிறவர்கள்; துணிகரக்காரர்கள்; அகங்காரிகள்; தூதர்ககளையும் தூஷிக்க அஞ்சாதவர்கள். 2பேதுரு 2:10,11. கள்ளப் போதகர்களின் குணமும் இப்படிப்பட்டதாகத்தான் இருந்தது.

பிலேயாமைப்பற்றி எண்ணாகமம் 22,23,24 அதிகாரங்களில் பார்க்கலாம். இஸ்ரவேலரைச் சபிப்பதற்காக பிலேயாமை மோவாபின் ராஜா பாலாகு கூலிக்கு அமர்த்தினான். முதலில் தயங்கினாலும், பண ஆசையால் பிலேயாம் சம்மதித்தான். எண் 22:7-21. வழியில் கர்த்தருடைய தூதன் அவனை எதிர்த்தார்; கழுதை ஒதுங்கியதால் உயிர்தப்பினான். கழுதையை அடித்த அவனுடைய கண் திறக்கப்பட்டபோது, தேவதூதனைப் பார்த்தான். எண் 22:22-35. இறுதியில் இஸ்ரவேலரை ஆசீர்வதித்தான். எண் 23:4-24:24. ''கள்ளப்போகர்கள் எல்லோரும் பிலேயாமின் வழியைப் பின்பற்றி, செம்மையான வழியைவிட்டுத் தப்பிநடந்து, விபசார மயக்கத்தால் நிறைந்து, பொருளாசைகளில் பழகின சாபத்தின் பிள்ளைகள்'' என்கிறார் பேதுரு. 2பேதுரு 2:14,15.

---

வேதாகமத்திலும், எலன் ஒய்ட் எழுத்துகளிலும் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற எச்சரிப்பு அனைத்தையும் பாருங்கள். செவந்த்-டே அட்வென்ட்டிஸ்ட் மக்களுக்குப் போதுமான எச்சரிப்பு இல்லை என்று நாம் சொல்லமுடியுமா?

"கிறிஸ்துவில் சுயாதீனம்" என்று கிறிஸ்தவர்கள் பேசுவதைக் கேட்டிருப்பீர்கள். அது சரியான கருத்துதான். நம் சொந்தக் கிரியைகளால் அல்ல, கிறிஸ்து நமக்காகச் செய்தவற்றின் அடிப்படையில் நாம் நியாயப்பிரமாணத்தின் தண்டனைத் தீர்ப்பிலிருந்து விடுதலை பெற்று, இரட்சிப்பின் நிச்சயத்தைப் பெற்றிருக்கிறோம். இந்த விடுதலையைப் புரிந்துகொள்ளவேண்டுமா? கிருபையைப் புரிந்துகொள்ளும்முன், மார்ட்டின் லூதர் பட்ட வேதனைகளைப் பாருங்கள். ஆனாலும் இந்த அற்புத உண்மையைத் தவறாகப் புரிந்துகொள்ள வாய்ப்பு உள்ளது. இதை நாம் பேதுருவின் நிருபத்தில் காணமுடிகிறது. " நம் இரட்சிப்புக்கு நாம் முழுவதும் கிறிஸ்துவைத்தான் சார்ந்திருக்கவேண்டும். துணிகரநம்பிக்கை எனும் தவறு ஏற்பட இதில் வாய்ப்பு உள்ளது. கிறிஸ்துவில் விடுதலை என்பதால், நியாயப்பிரமாணம் தேவையில்லை என்று தவறாக நினைக்கிறார்கள். 'நியாயப்பிரமாணத்தின் ஆக்கினையிலிருந்து நம்மை விடுவிக்க இயேசு வந்ததால், நியாயப்பிரமாணம் ஒழிந்துவிட்டது; அதைக் கடைப்பிடிக்கிறவர்கள் எல்லோரும் கிருபையிலிருந்து விழுந்தவர்கள்' என்கிறார்கள். இவ்வாறு உண்மையும் பொய்யும் ஒன்றுபோல் தெரிவதால், பரிசுத்த ஆவியானவரால் நடத்தப்படாதவர்கள் பொய்யை நம்பி, சாத்தானால் ஏமாற்றப்பட வாய்ப்பு உள்ளது. இவ்வாறு, பொய்யை உண்மையென்று நம்பவைத்து, புரொட்டஸ்டண்ட் மக்களை தனக்கு அடிபணியவைக்கிறான்."–*CT, p324.*

## கலந்துரையாடக் கேள்விகள்

1. *தவறான உபதேசத்தின் விளைவுபற்றி, 2பேதுரு 2:19 என்ன சொல்கிறது? முக்கியமான சத்தியங்களை நாமே படித்து விளங்கிக்கொள்ளவேண்டியது ஏன் முக்கியம்? வித்தியாசமாக நம்புவது எப்போது ஆபத்தாக மாறுகிறது?*
2. *நியாயத்தீர்ப்பு, தண்டனைபற்றி பேதுரு பயன்படுத்துகிற கடுமையான வார்த்தைகளைப் பாருங்கள். 'தங்களுக்குத் தீவிரமான அழிவை வருவித்துக் கொள்ளுவார்கள்.' 2பேதுரு 2:1. 'தங்கள் கேட்டிலே கெட்டழிந்து, அநீதத்தின் பலனை அடைவார்கள்.' 2பேதுரு 2:12. 'அக்கிரமக்காரரை ஆக்கினைக்கு உள்ளானவர்களாக நியாயத்தீர்ப்பு நாளுக்கு வைக்க அறிந்திருக்கிறார்.' 2பேதுரு 2:9; 'அவர்களுக்கு விதிக்கப்பட்ட ஆக்கினை அயர்ந்திராது, அவர்களுடைய அழிவு உறங்காது.' 2பேதுரு 2:3. நியாயத்தீர்ப்பின் நிஜம் குறித்து என்ன புரிகிறது? தமது மக்களைத் தவறுக்குள் நடத்துகிறவர்களை தேவன் தண்டிப்பார் என்பதுபற்றி என்ன புரிகிறது?*
3. *'கிறிஸ்துவில் சுயாதீனம்' என்பவர்கள் பத்துக் கற்பனை முழுவதையும் வேண்டாமென ஒதுக்குவதில்லை; நான்காவது கற்பனையாகிய ஓய்வுநாள் கற்பனையை மட்டும்தான் ஒதுக்குகிறார்கள். 'கிறிஸ்துவில் சுயாதீனம்' எனும் கருத்து எவ்வாறு திரித்துக் கூறப்படுவதற்கான வாய்ப்பு உள்ளதாகத் தெரிகிறது?*

# பாருங்கள் கேளுங்கள்

## காக்கும் கரங்கள் நிகழ்ச்சிகள்

## உங்கள் கேள்வியின் நேரம்

தேவ செய்தியாளர்கள்: போதகர் சாத்ராக் சாமுவேல்,

டாக்டர் ஏ. ஜான்சன்

தமிழன் தொலைக்காட்சியில் சனிக்கிழமை காலை 6.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## சுபவார்த்தா

**Big TV** யில் தெலுங்கு நிகழ்ச்சிகளை காலை 7.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## ஹோப் டிவி நிகழ்ச்சிகள்

அனுதினமும் காலை 6.00 மணிக்கும், 8.30 மணிக்கும், மாலை 6.00 மணிக்கும், இரவு 8.30 மணிக்கும் காணத்தவறாதீர்கள்

## ஆசீர்வாத நம்பிக்கை

இமயம் தொலைக்காட்சியில் சனிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் காலை 6.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## அட்வென்ட்டிஸ்ட் வேர்ல்டு ரேடியோ

அனுதினமும்: பிற்பகல் 3 மணிக்கு 19 மீட்டர் பேண்ட்,

15680 கிலோ ஹெர்ட்ஸில் கேட்கத்தவறாதீர்கள்

---

## வலைதளத்தில் (Internet இல்)

## ஓய்வுநாட்பள்ளிப் பாடங்கள்

அந்தந்த வாரத்துக்குரிய ஓய்வுநாட்பள்ளிப் பாடத்தை வீடியோவாகப் பார்க்கலாம்.

**YOUTUBE** க்குப் போய்,

## Mogappair SDA Tamil Sabbath School Lesson

என்று டைப் பண்ணினால் பாடங்கள் வரும்.

அந்த வாரத்துக்குரிய பாட எண்ணைத் தேடிப்பார்த்துக் கேட்கவும்.